விட்டோம் என்று சொல்லிவிட்டு, ஓட்டல்களில் இட்லி போன்ற உணவுப் பண்டங்களைப் பழைய விலைக்கே விற்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் தமிழகத்திலே பல ஓட்டல்களில் ஏற்றிய விலையைக் குறைக்காமல் இருக்கின்றார்களே அது சம்பந்தமாக அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது என்று அறிய விரும்புகிறேன்-

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் கருத்தைத் தெளிவாக இங்கே மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். ஓட்டல் உரிமையாளர்கள் சங்கமும் விளம்பரத்தின் மூலமாகவும் அறிக்கைகளின் மூலமாகவும் கேட்டுக் கொண்டுள்ளது. அப்படியிருந்தும் அதிக விலைக்கு விற்கிறார்கள் என்ற தகவல் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர முழு உரிமையுண்டு, அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

(உ) பேரவை நடவடிக்கைகளின் சுருக்க வெளியீட்டிலுள்ள குறிப்பு.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று வணிகவரி மானியத்திலே என்னால் கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானம் அவையிலே குரல் வோட்டில் நிராகரிக்கப்பட்டது. சுருக்க வெளியீட்டிலே நான் வாபஸ் பெற்றதாக இருக்கிறது. அதைத் திருத்தியமைக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது கவனிக்கப்படும்.

3. கவன ஈர்ப்பு.

(அ) ஆழ்துளைக்குழாய்க் கிணறுகள் அமைக்க கடைப்பிடிக்கப்படும் விதிமுறைகள்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''வறட்சிப் பகுதிகளில் புதியதாக குழாய்க் கிணறு அமைக்க, அவ்விடத்தில் 500 பேர் மக்கள் தொகையும் மற்றும் புதியதாக அமைக்கும் குழாய்க் கிணறுகளுக்கிடையே 1 கி.மீட்டர் தொலைவும் இருக்கவேண்டும் என்ற விதிமுறையைக் கடைப்பிடிப்பதால் வறட்சிப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்கள் குடிநீருக்கு இன்னல்படுவது'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்,

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :